# அரசறிவியல்

தரம் - 12, 13

# முரண்பாட்டு தீர்வு



he National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

# அரசறிவியல்

தரம் - 12, 13

தேர்ச்சி :- 06

தேர்ச்சிமட்டம் :- 6.2 சமாதானத்தை கட்டியெழுப்புதலினதும் அதனை மீள் கட்டமைத்துதலினதும் முரண்பாட்டு தீர்வு செயன்முறையை தெரிந்து கொள்வர்.

## முரண்பாட்டு தீர்வு

முரண்பாடு, முரண்பாட்டு தீர்வு தொடர்பான கற்கை அரசறிவியலில் 1980 களின் இறுதிப்பகுதியில் இருந்தே கற்கப்பட தொடங்கியது.

முரண்பாடு தொடர்பாக பேராசிரியர் கிறிஸ்டோபர் மிச்செலின் கூறும்போது "முரண்பாடு என்பது தமக்கிடையே ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத நோக்கங்களையுடைய அல்லது அவ்வாறு சிந்திக்கும் இரு தரப்புக்கள் அல்லது நபர்கள் அல்லது சமூகக்குழு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களுக்கிடையில் நிலவும் தொடர்பாகும்."

போட்டித்தன்மை, எதிர்வாதம், மற்றும் பிணக்கு ஆகியன மனித தொடர்புகளில் தொடர்ச்சியாக நிலவுவதால் அவை தவிர்க்கப்பட முடியாத நபர்களுக்கிடையிலான மற்றும் சமூக குழுக்களுக்கிடையிலான தொடர்பாகும். எனினும் முரண்பாட்டு தீர்வு முறையில் கூறப்படுவது அவை தரப்புக்களுக்கு அந்யோன்யமான முறையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற முரண்பாடாக வளர்ச்சியடைவதனாலேயே தடுக்கப்படும்.

முரண்பாட்டுத் தீர்வு மிக நீண்ட ஒரு செயன்முறையாகும். தனிப்பட்ட ரீதியிலும், சமூக அரசியல் முரண்பாடுகளிலும் அவதானிக்கத்தக்க விடயம் யாதெனில் முரண்பாட்டை முழுமையாக தீர்த்துக் கொள்ளல் கடினமாயினும் அதனை சாதகமாக அணுகும் வழிமுறைகள் காணப்படுகின்றன. அந்த வகையில்

1. முரண்பாடு தொடர்பாக **முன்னெச்சரிக்கை** செய்தல் எண்ணக்கரு 1980 - 1990 வளர்ச்சியடைந்து சமூகத்தில் ஏற்பட வாய்ப்புள்ள முரண்பாடுகள் தொடர்பாக முன்னரே இனங்கண்டு அவை ஏற்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்தலாகும்.

2. **முரண்பாட்டைத் தவிர்த்தல்** :- முரண்பாடு ஏற்படுவதற்கான காரணங்கள், வாய்ப்புக்கள் மற்றும் இடங்களை இனங்கண்டதன் பின்னர் அவற்றை முரண்பாடாக மாறாமல் தடுத்தல், சுமாராக தவிர்த்தல், ஆழமாக தவிர்த்தல்.

3. **முரண்பாட்டு முகாமைத்துவம்** :- இரு கண்ணோட்டத்தில் நோக்கமுடியும் இரு கண்ணோட்டத்தில் நோக்க முடியும்.

தொகுப்பு :- திருமதி பா. றஞ்சினி, ஆசிரியர் - (யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன், ஆசிரியர் - த. தொ. தொ., (வ/ புளியங்குளம் இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**முரண்பாட்டு முகாமைத்துவம**

முரண்பாட்டை முழுமையாக தீர்ப்பது கடினமாக நீண்ட காலம் எடுக்க கூடியது. தீவிரத்தன்மையை கட்டுப்படுத்தி முகாமை செய்தல்.

முரண்பாட்டை ஜனநாயக மற்றும் சட்டத்தினுள் கலந்துரையாடல் முறை மூலம் நடைபெறுகின்ற செயற்பாடாக மாற்றுதல்.

4 **முரண்பாட்டு நிலைமாற்றம்** :- இவ்வணுகுமுறை மூலம் முரண்பாட்டை சாதகமான முறையில் தீர்த்துக்கொள்ளல். இதனால் முரண்பாட்டின் தன்மை, நோக்கம், அபிலாசை என்பனவும் நிலைமாற்றம் அடையும்.

பீட்டர் வொலன்ஸ்டின் "வரலாற்று செயன்முறையில் கிடைக்கும் கற்றல் அனுபவத்தினால் கிடைக்கும் பெறுபேறு" என்றே குறிப்பிடுகின்றார்.

முரண்பாட்டு நிலைமாற்றம் பல வகைகளில் ஏற்பட முடியும்.

- தரப்புக்கள் நிலைமாறுதல்.
- கட்டமைப்பு நிலைமாற்றம்.
- பிரச்சனை மற்றும் நிகழ்ச்சி நிரலின் நிலைமாற்றம்.
- முரண்பாட்டு தரப்புக்களின் நடத்தைகளில் மாற்றம் ஏற்படல்.
- உச்சவாத நோக்கல்களுக்கு பதிலாக மத்திய மய சமாதானத்திற்கு வாய்ப்பளிக்கும் நோக்கம் உருவாகுதல்.
- முரண்பாட்டு தரப்பு பங்குதாரர் மாற்றம் அடைந்து மனோநிலை மாற்றமடைவதால் முரண்பாட்டுக்கு தாக்கம் ஏற்படும்.
- முரண்பாட்டு விதிமுறை நிலைமாற்றம்.

தொகுப்பு :- திருமதி பா. ரஞ்சினி, ஆசிரியர் - (யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன், ஆசிரியர் - த. தொ. தொ., (வ/ புளியங்குளம் இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**முரண்பாட்டுக்கு பின்னரான சமாதானத்தை கட்டி எழுப்புதல்.**

5. சமாதான உடன்படிக்கை ஒன்றில் கையொப்பம் இடல் யுத்தத்தை முடிவுறுத்தல் இதன் மூலம் புலப்படும் கருத்தாக உள்ளது.

முரண்பாட்டின் போது அழிவடைந்த பிரதேசங்கள் மற்றும் சமூகத்தை மீளக் கட்டியெழுப்புதல், புணர்வாழ்வு அளித்தல், மீள் அபிவிருத்தி, மக்களுக்கு சலுகை வழங்கல் நீதி மற்றும் நியாயத்தை கட்டியெழுப்புதல் போன்றவற்றை குறிப்பிட முடியும்.

6. **முரண்பாட்டு தீர்வு** என்பது முரண்பாடு மீண்டும் ஏற்படா வண்ணம் அதன் அடிப்படை காரணிகளை போலவே முரண்பாடு ஏற்பட்ட போது தோற்றமடைந்த துன்ப துயரங்களிலும் அவதானம் செலுத்தி செய்யப்படும் செயற்பாடு சமாதானத்தை கட்டி எழுப்புவதால் ஏற்படல் நோக்கமாகும்.

## வினாக்கள்

1. முரண்பாடு என்பதற்கு வரைவிலக்கணம் கூறிய அறிஞரையும், முரண்பாட்டு தீர்வுச் செயனமுறை அரசறிவியலில் பேசப்பட்ட காலப்பகுதியையும் குறிப்பிடுக
2. முரண்பாட்டு தீர்வு செயன்முறைகள் இரண்டு தருக.
3. முரண்பாட்டு தவிர்த்தலின் பிரதான இருவகைகளையும் குறிப்பிடுக.
4. முரண்பாட்டு தீர்வு முறைகளை பரிசீலிக்குக.

## விடைகள்

1. பேராசிரியர் கிறிஸ்டோபர் மிச்செலின்
1980 பிற்பட்ட காலப்பகுதி

2. முரண்பாட்டு முன்னெச்சரிக்கை
முரண்பாட்டை தவிர்த்தல்
முரண்பாட்டு நிலைமாற்றம்

3. முரண்பாட்டை சுமாராக தவிர்த்தல்
முரண்பாட்டை ஆழமாக தவிர்த்தல்

தொகுப்பு :- திருமதி பா. றஞ்சினி, ஆசிரியர் - (யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன், ஆசிரியர் - த. தொ. தொ., (வ/ புளியங்குளம் இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk